ஞானசம்பந்த கோஷ்டி

[illegible]

4

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்திற்
பிரதமாசாரியராக வெழுந்தருளியிருந்த

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி

இவை

மேற்படி ஆதீனத்தின் அடியார்குழாத்துளொருவரும்,
வித்துவ சிரோமணியுமாகிய

ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவரரால்

இயற்றப்பட்டன

இவை

மேற்படி ஆதீனத்தின் அடியார்குழாத்துளொருவரும்,
திருப்பனந்தாள் காசிமடாலய ஆதீன கர்த்தரான

ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி சொக்கலிங்க சுவாமிகளின்

மாணாக்கருமாகிய

ஸ்ரீ காசியில் வாசஞ்செய்யும்

தரு. ஞான. நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்

பல்லாவரம் டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன

May 3rd, 1924.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்திற்
பிரதமாசாரியராக வெழுந்தருளியிருந்த

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர்

சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி

இவை

மேற்படி ஆதீனத்தின் அடியார்குழாத்துளொருவரும்,
வித்துவ சிரோமணியுமாகிய

ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவரால்
இயற்றப்பட்டன

இவை

மேற்படி ஆதீனத்தின் அடியார்குழாத்துளொருவரும்
திருப்பனந்தாள் காசிமடாலய ஆதீன கர்த்தரான

ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி சொக்கலிங்க சுவாமிகளின்
மாணாக்கருமாகிய

ஸ்ரீ காசியில் வாசஞ்செய்யும்
தரு. ஞான. நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்

பல்லாவரம் டி. எம். அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன

1924.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவரர்

சரித்திரச் சுருக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்தின் பிரதமாசாரியராகிய ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி முதலாகிய பிரபந்தங்களை யருளிச்செய்த, "வெள்ளி யம்பலவாண முனிவரர்" என்பர், கல்வி அறிவு ஒழுக்கம் பக்தி துறவு முதலிய எவ்வாற்றானுஞ் சிறந்தவர்.

இவர், மேற்கூறிய ஆதீனத்தில் நான்காவது குருமூர்த்தியாக வெழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணித் தேசிகரிடத்தில் சமயதீக்ஷையும் விசேஷதீக்ஷையும் சைவசந்நியாசமும் பெற்றவர்.

படிக்காசு வைத்த முனிவருடன் காசியாத்திரை சென்று, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளிடத்தில் கல்வி கற்று, வடமொழிக் கடலினும் தென்மொழிக் கடலினும் வல்லரானவர்.

மேற்கூறிய ஆதீனத்தில் ஐந்தாவது குருமூர்த்த மாக வெழுந்தருளியிருந்த, ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக ரிடத்தில் ஞானதீக்ஷை பெற்று, அவர் சன்னிதியில் மெய்கண்ட சாத்திரங்களையும் பண்டார சாத்திரங்களை யும் ஐயந்திரிபற வோதி யுணர்ந்தவர்.

மைசூர் அரசன் வேண்டுகோளாற் கந்தபுராணச் சுருக்கம் அருளிச்செய்த சம்பந்த சரணாலய சுவாமி களுக்குக் கல்வி கற்பித்த போதகாசிரியர்.

இத்தகைய சுவாமிகள், தக்ஷிண யாத்திரை செய் யும்பொழுது, திருச்செந்தூரிலே முருகக் கடவுளைத் தரிசித்து, ஆங்குள்ள அடியார்கள் வேண்டுகோளின் படி ஷண்முக விலாசத்திற் பிரசங்கஞ் செய்துகொண் டிருந்தனர். அத்தருணத்திலே, வித்தியாகர்வங் கொண் டிருந்த ஒரு புலவர் சுவாமிகளின் கல்விப்பெருக்கைக் கண்டு பொறாமையுற்றுக் குதர்க்கஞ்செய்து தூஷிக்கத் தொடங்கினர். அப்பொழுது சுவாமிகள், அப்புலவரை நோக்கி, நாம் உன்னிடத்தில் நேரில்நின்று வாதஞ் செய்வதற்கு நீ அருகனல்லை. ஆதலான், எமது மாணாக் கனால் உன்னை வெற்றிகொள்வேம் எனக்கூறிப், பிரசங் கத்தைச் சிறப்பாகச் செய்துமுடித்துத், திருநெல்வேலி யை யடைந்து, பொருநைநதி தீரத்திலுள்ள சிந்துபூந் துறையிலே தமது மடாலயத்தில் எழுந்தருளியிருந்து, மாணாக்கர் பலர்க்கு இலக்கண விலக்கியங்களைப் போ தித்து வந்தார்.

அக் காலத்திலே, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பேரிலக்கணங்களைப் பெரிதுங் கற்க விரும் பித் தம் சகோதரர்களாகிய, வேலைய சுவாமிகள், கருணைப்பிரகாச சுவாமிகள் என்னும் இருவரோடும்

தக்ஷிணத்தை நாடிச் செல்லும்பொழுது, வடமொழி யிலும் தென்மொழியிலும் அதிவல்லவராகிய வெள்ளி யம்பலவாண முனிவரர் சிந்துபூந்துறையி லிருக்கின் றூர்க ளெனக் கேள்வியுற்று, ஆங்கடைந்து, சுவாமி களைத் தரிசித்து வணங்கித் தமது கருத்தைத் தெரி வித்துக்கொண்டனர். முனிவரர், சிவப்பிரகாச சுவாமி களுடைய இலக்கியப் பயிற்சியை யறிதற்பொருட்டுக், 'கு' என்பதை முதற்கொண்டு, 'ஊருடையான்' என் பதை இடையிற்பெய்து, 'கு' என்பதையே ஈற்றிலுங் கொண்டு முடியும்படி ஒரு வெண்பாப் பாடுகவென்று கூறச், சிவப்பிரகாச சுவாமிகள்,

" குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வார்க்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைத்தோன்மேற்கொள்ள
வூருடையா னென்னு முலகு "

என்னும் வெண்பாவை யியற்றினர். மேற்கூறிய வெண் பாவில் வடக்கோடு தேருடையான் என்றமைத்தமை யை முனிவர் வியந்து பாராட்டி, அவருக்கும், அவர் சகோதரர்களுக்கும் சில தினங்களுக்குள் பஞ்ச லக்ஷ ணங்களையுங் கற்பித்தருளினர். சிவப்பிரகாச சுவாமி கள், அண்ணாமலை ரெட்டியார், தமக்கு வழிச்செலவிற் காக உபகரித்த முந்நூறு பொன்னையும் குருதக்ஷிணை யாகவைத்துவணங்க, முனிவரர், "இப்பொருள் நமக்கு வேண்டுவதில்லை, திருச்செந்தூரிலே, நம்மிடம் குதர்க் கஞ்செய்து நம்மைத் தூஷித்த புலவனை உனது வாயி லாக வெற்றிகொண்டு, அவன் வந்து நம்மை வணங்கும் படி செய்துகோடலே குருதக்ஷிணை யாகு" மென்று மறுத்தருளினர்.

உடனே சிவப்பிரகாச சுவாமிகள், ஆசிரியரை
வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு, ஆங்குள்ள மா
ணாக்கர்சிலருடன் திருச்செந்தூரிற்சென்று முருகக்கட
வுளைத் தரிசித்து வணங்கிப் பிரதக்ஷிணம் வரும்பொழு
து, முனிவராற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவர் எதிர்ப்பட்
டுச், சிவப்பிரகாச சுவாமிகள் யாவரென்று அவருடன்
வந்த மாணாக்கரிடத்தில் வினவி, வெள்ளியம்பலவாண
முனிவரரிடத்திற் பாடங்கேட்டவரென்பதை யறிந்து,
முன்னே, முனிவர் சபதஞ்செய்ததை நினைந்து, அவர்க
ளைத் தூஷிக்கத்தொடங்கினார். அப்பொழுது, சிவப்பிர
காச சுவாமிகளுக்கும், அப்புலவருக்கும் விவாதம் நேரி
டப், புலவர், சிவப்பிரகாச சுவாமிகளை நூதனவகை
யாற்பாடி வெற்றிகொள்வோமெனத் துணிந்து, நாமிரு
வரும் நிரோட்டகயமகம் பாடுவாம். முற்கொண்டு பாடி
முடித்தவர்க்கு, அங்ஙனம் பாடாதார் அடிமையாவரென
வாக்குத்தத்தஞ் செய்தனர். அதுகேட்ட சிவப்பிரகாச
சுவாமிகள், தம் கருத்து நிறைவேறும் வழி இதுவே
யெனக்கருதி அதற்கிசைந்து, அவரோடு பாடத்தொ
டங்கி, அத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகக்
கடவுண்மீது நிரோட்டகயமகவந்தாதித்தொடையாக
முப்பது கட்டளைக்கலித்துறை பாடி முடித்தனர். அது
கண்டு புலவர், தாம் ஒரு செய்யுளேனும் பாட முடியா
மையை யுணர்ந்து, சிவப்பிரகாச சுவாமிகளை வணங்கி,
யான் தங்களுக்கு அடிமையாயினேன் என்று கூறி
னார். உடனே சிவப்பிரகாச சுவாமிகள், தமக்கு அடி
மையாக வமைந்த அப்புலவரைச் சிந்துபூந்துறைக்கு
அழைத்துவந்து, தாம் போதகாசிரியராகக் கொண்ட
முனிவரருக்கு அடிமையாக்கிவிட்டனர். முனிவரர் திரு

வுள மிக மகிழ்ந்து, சிவப்பிரகாச சுவாமிகளை நோக்கி, நீ யியற்றிய செய்யுளில் வியந்துகூறிய சிதம்பரத்தில் சிலநாள் வாசஞ்செய்கவென விடைகொடுத்தனுப்பினர்.

பின்பு முனிவரர், தமது ஆதீனத்தின் பிரதமா சாரியராகிய ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் திருவாய்மலர்ந் தருளிய முத்திநிச்சயம் என்னும் பண்டார சாத்திரத் திற்கு ஒரு பேருரையும், மெய்கண்டசாத்திரம் பதி னுன்கினுள் ஒன்ருகிய சிவஞானசித்தியாருக்கு, 'ஞானு பரண விளக்கம்' என்னும் பாஷியமும் இயற்றி யருளினுர்.

இங்ஙனங் கூறிப் போந்த வெள்ளி யம்பலவாண முனிவரர், சிவநேசமுதிர்ச்சியால் சிவஸ்தல யாத்திரை செய்யும்பொழுது, ஆங்காங்குள்ள அடியார்கள் வேண் டுகோளின்படி பல புராணப் பொருள்களையும் பிரசங் கஞ்செய்து வருவார். அக்காலத்தில், எட்டுச்சுவடிகள் பாணவாய்ப் பட்டேனும் சிதல்வாய்ப் பட்டேனும் சிதைந் திருக்குமாயின், சமயோசிதமாகக் கற்பனை நிறைந்த நூதனமான செய்யுட்களை நெட்டுருப்பண் ணிப் பாடம் ஒப்பித்தல்போலக் கூறிச் சிறப்புடன் பிர சங்கஞ் செய்தருளுவார். அவ்வாறு இவர்கூறும் செய் யுட்களை ஆங்காங் குள்ளவர்கள் எழுதித் தமது புத்த கங்களிற் சேர்த்துக்கொள்ளுவார்கள். மேலும், முனி வரர், சுவாமிதரிசனஞ் செய்யும்பொழுது துதிசெய் யும் நூதனமான சந்தங்களும் கற்பனைகளும் வாய்ந்த செய்யுட்களையும் தம் தோத்திரப் புத்தகங்களில் வரைந் துகொள்ளுவார்கள். இவ்வாறு இவர் இயற்றிய செய் யுட்கள் அநேக புராணங்களிலும் திருமுறையாதி அருட்பாக்களிலும் கலந்துவிட்டன. முனிவர் இவ்வாறு

சிவஸ்தலங்கள்தோறும் சென்று யாத்திரை செய்து முடித்தபின், விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாகிய சிதம்பரஞ் சார்ந்து நெடுநாள் சிவயோக சமாதியில் ஞானநிட்டை கூடியிருந்து, ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய ரஞ்சிதமுள்ள குஞ்சிதபாதத்தின் நீழலில் இரண்டறக் கலந்தருளினர்.

இம் முனிவர் இயற்றிய செய்யுட்கள் மேற்கூறிய வண்ணம் புராணாதிகளில் கலந்துவிட்டபடியால் வித்துவான்கள் பலரும், ஜீவகசிந்தாமணியில் கந்தியார் தம் செய்யுட்களைக் கலப்பித்ததுபோல, வெள்ளியாரும், தேவாரத் திருமுறையில் இறந்துபட்ட திருப்பதிகங்களைப் பூர்த்திசெய்யக்கருதி, நூதனமான செய்யுட்களை யியற்றி ஆங்காங்குள்ள பிரதிகளிற் சேர்த்துவிட்டனரென்றும், புராணங்களிற் பல செய்யுட்களைக் கூட்டிவிட்டனரென்றும் ஊகிக்கின்றனர். இவர் இவ்வாறு செய்யக் கருதியிருப்பாராயின், இப்பொழுது தேவாரத் திருமுறையிலுள்ள திருப்பதிகங்களெல்லாம் குறைபாடின்றிப் பூர்த்தியாகவே யிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

இத்துணைச் சிறப்புவாய்ந்த வித்துவசிரோமணியாகிய நம் முனிவர் அருளிச்செய்த நூல்களில் மேற்கூறிய நூல்களேயன்றி, அவர்களியற்றிய ஏனைய நூல்கள் காணப்படவில்லை. இவர்களியற்றிய நூல்கள் சென்ற பலவருடங்களாகக் கவனிக்கப்படாதிருந்தமை விசனிக்கத்தக்கதே. ஆயினும், இவர்களியற்றிய நூல்கள் எங்கேனும், எவரிடத்தேனும் இருப்பின் அவற்றை எனக்கு அனுப்புவார்களாயின், வந்தனத்துடன் ஏற்று அச்சிற்பதிப்பித்துப் பலருக்கும் பயன்படச் செய்வேன்.

இனியேனும், இம்முனிவரியற்றிய நூல்கள் அச்சு வாகனமேறி உலகமெங்கும் உலாவும் வண்ணம் திருவருள் பாலிக்கவேண்டுமென்று, எல்லாம்வல்ல பெருங் கருணைப் பிழம்பாகிய, ஸ்ரீ வெற்றி வேலாயுதப் பெருமானுடைய செங்கமலப் பொற்பாதங்களைச் சிரமேற் சூடி மனம் வாக்குக் காயங்களால் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேன்.

இங்ஙனம்

தரு. ஞான. நாகலிங்கத்தம்பிரான்.

திருச்சிற்றம்பலம்

குருபாதந்துணை

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை

காப்பு

திருமருவு மருமலர்க டுன்னிவரு பொன்னிசூழ்
சென்னிவளநாடு நாளுந்
திகழ்தரு தவப்பேறு முன்னின்ற தென்னவளர்
தென்னன்மதுரா புரியினின்
றருளுருவு கொண்டருளி வந்தசற் குருராய
னடியவர்க் கெளியகோமா
னவனிபுகழ் திருஞான சம்பந்த னெந்தைக்
கருட்சமுக மாலைபாடக்
கருமைமத நதிபெருகு மிருகவுட் கரிமுகக்
கடவுள்கட லோலமிடவுங்
கனகமணி மகுடதட முடியவுணர் முடியவுங்
கதிர்வேல்விடுத்த திறல்சேர்
முருகனது முன்னர்வரு பொன்னனைய செம்மேனி
முதல்வனுமை புதல்வனிருதாண்
முண்டகமு மெம்மிதய முண்டகமு மொன்றெனு
முயங்குற நினைந்திடுதுமே

நூல்

வேதாவு மாலுமறி தற்கரிய மூர்த்தியா
மெத்திய சிவானுபவமே
மேற்கொண்டு சிறிதுமிப் புவிவாழ் வெனும்பொய்யை
மெய்யென மயங்குறாதே
நாதாதி பாசங் கழன்றுவாழ் சல்லாப
நல்லோர்கள் சங்கமொருபால்

நவிலுமொழி குழறநய னங்கள்புன லேசொரிய
நங்கள்குறை தீரென் றுநின்
றோதா வுளங்கரைந் தலறிக் கிடந்துருண்
டோலமிடு மன்பரொருபா
லொருவருக் கொருவரடி மைத்திற முரைத்துரைத்
துருகுமடி யவர்களொருபால்
காதார் பணிக்குழைய ஞூரின் ஞானப்ர
காசன் றருந்தருமெழிற்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே க

நம்போல வெல்லவரு மானந்த மானதோர்
நன்மைதனை யிம்மைதனிலே
நண்ணிடுவ தென்றென் றிரங்கும் பெருங்கருணை
நாடுங் குழாங்களொருபா
லம்போ ருகத்துநனி தத்துமளி மெத்துமித
ழாடவரு பீடமேல்வா
ழயனார் தமக்குயா மென்கொலோ கைம்மா
றளிப்பதெனு மன்பரொருபால்
வெம்போ ரிடுங்கணை நெடுங்கண்மட மங்கையர்கள்
வெங்களப கொங்கை மிசையே
வீழ்வுறினு மெந்தவகை வாழ்வுறினு மந்தவகை
வேறுபடு மன்பரொருபால்
கம்போல் வெளுத்துள பளிக்குநெடு மாடமேற்
கவினுடுக் குமிழிபுரையுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே உ

உற்றபேர் யாவர்களு மொல்லைதனி லுத்தமர்க
ளுத்தூளி தப்பூதிவீ
சொளித்தேசி னூடே யொளித்தே யவர்க்குடைமை
யுருவமென வருவமதனைப்

பெற்றவரை நண்ணுமவர் மேலுமவர் போலுமப்
பெற்றிமை தரிப்பரொருபாற்
பின்னுவார் சடிலமொடு துன்னுவா ராகிநிறை
பெரியோரினங்க ளொருபால்
செற்றமுத லானபகை செற்றநெறி மாதவர்கள்
செற்றவெதிர் வார்விழிகளுஞ்
சிந்தையு மிகக்குளிர வந்தருளு மமுதமிகு
தெய்வீக ஞானகுரவன்
கற்றவர் சினத்தரு வனத்தையு மலைக்குமொரு
காலான கவிதையாளன்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே ௫

உலகுதொழு புகலிவரு குரிசிலுஞ் சிலைமீதி
லுததியின் மிதந்தவரசு
மொருமுதலை முதலைசிறு மதலைதா வருளென்
றுரைத்தமி ழுரைத்தகோவும்
அலகில்புகழ் வாதவூர் வேதியனு மோதியவை
யாதிதிகழோதை யொருபா
லடியவர் தனித்தனி தனைப்புகழ் சிறப்புள
வருட்கவி முழக்கமொருபால்
சலதிநிகர் படையரசர் கனகமணி முடிகளுந்
தவமுனிவர் சடைமுடிகளுந்
தடவச் சிவந்துமிளிர் தாளாளன் முத்திநெறி
தந்தருள வந்தகுரவன்
கலசமுலை யரிவையர்க ளுருவையெதிர் கண்டிளைஞர்
கண்மறுகு மறுகுபுடைசூழ்
கமலாபுரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே ௬

உலகிலுறு மலகில்பல கலைகளு மிகக்கூர்மை
யுள்ளமுள் ளாராகியிங்

குந்துபல சமயங்கள் வந்தடி பணிந்திட
வுரைக்குமுறை யோர்களொருபால்
இலகுசதுர் விதமருவு கவிதைமழை கடிதே
யெதிர்ந்தவர் பயந்தோடுமா
றினிதினரு ளடியவர்கள் பொழியவுயர் புலவர்மிக
விச்சித்து நிற்பரொருபால்
பலவினறு பலமினிய பலமுதவு மதுநதி
பரந்திரைந் தோடியயலே
பழனத் துலாவிவரு புதுநத் தமிழ்ந்தநனி
பாய்கின்ற வளமைவளமுங்
கலபமயி னடனமிடு பொழில்களும் பொழில்கள்சூழ்
காவிவா வியுமேவிடுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே ௫

தங்குரவன் மேன்மையே மேன்மையா நூல்சொன்ன
தன்மையே நன்மைநெறியார்
தங்களை விளித்திருள் கெடுத்தருள் கொடுத்துவளர்
சதுரிஞ ஞடொறுமுணர்ந்
தெங்குர வனைப்போல ஞாலத் தருட்குரவ
ரில்லையினி வல்லையவனு
மெல்லவரு முய்திறெனின் முகமனென் பார்கொலோ
வென்றுமெலி வார்களொருபால்
பொங்குபுக ழன்னவனை நன்மைசிறி தில்லாத
புல்லரேனும் புகழிலெப்
போதகந் தன்னிலப் போதக னெனக்கொண்டு
புகழாம லிகழ்வார்களார்
கங்கைமதி பொதிகின்ற சடையானை யுறழினுங்
கடையாய் நினைப்பரொருபாற்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே ௬

ஒருவர்பா லொருவர்புதி தாகமிகு தாகமுட
ஞேதுநூ லோதையொருபா
லோதியது தன்னையது பின்னையொரு வர்க்கொருவ
ருரைசெய்யு மாவமொருபால்
அருவரா தென்கொலோ மின்கொலோ வென்னுமிடை
யரிவையர்கள் கலவிநலமென்
றவமே விழுந்துசிலர் கெடுகின்ற வாறென்
றழுங்குமடி யார்களொருபான்
முருகுதெரி தமிழின்வழி மதுவொழுக முகையவிழ
முளரிமேல் விளரிபாடு
மொய்யளி யுலாவுந் தடங்களு நெடுங்ககன
முகடுதொடு கனகமதிலுங்
கருமைசேர் பொழில்களுங் கடைசியர்க டிழனிவளர்
கழனியுங் களுலும்வளமைக்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே எ

ஈதேய லாதுக்கதி யொன்றுமினி யின்றென்
றிருந்தகிலை யோர்களிறையோ
னின்னதே முத்தியென முன்னமே சொன்னநெறி
யின்னதனி னில்லையதனுன்
மீதேயு முண்டென்று மண்டுபுரி நல்வினை
வெளிப்பட நினைந்துகடிதே
மேவியிங் கருளான வழிகண்டு* கலிகால
மெலிவுபெறு வார்களொருபால்
ஏதேது வந்திடினு மெந்தையரு ளல்லதொன்
றில்லையென வெண்ணியெண்ணி
யென்போ லிகட்குமிகு மன்போ டறிந்திட
விசைக்குமடி யார்களொருபால்
காதேவ தேவவென் றண்டர்தொழ விடமுண்ட
கண்டத் திருட்காந்தே

* கலிகால—கெடுதிநீங்கும்படி

கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே அ

எந்நாளும் மின்னறரு மிவ்வாழ்வு பொய்வாழ்
வெனும்பரி சறிந்திடாமே
யிறந்தும் பிறந்துந் திரிந்தோ மெலிந்தோ
மெமக்கான காலமிதுவென்
றுன்னா விருந்தவர்க ளென்னா விருந்தவர்க
ளொன்னாரெனும் படிநினைந்
தோடிவந் தார்களைத் தேடிவந் தேசுற்ற
மூடலிடுகின்ற தொருபால்
இந்நாளி னன்னெறிகண் முன்னா ளியற்றினோ
மிந்நாளி னாளிகோரத்
திளவாளை தத்துமது ராபுரிக் கடவுள்வந்
தெமையாள வென்பரொருபால்
கைந்நாக மதகரட வருவியொடு புரளமுன்
கடிதினுரி கொண்டதிறலோன்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே கூ

இறைவனை யருச்சனை புரிந்தே திரிந்துருகி
யிருகணீர் சொரியவெரிசே
ரிழுதுபெற வழுதுநனி தொழுதுடல மென்றுபோ
மென்றுமெலி வார்களொருபான்
முறைமைநெறி தவறாத மாதவர்க ளாதலான்
மூதறிவுகொண்ட வருள்சேர்
முதியவர்க ளென்னுமிவ ரதிகரென விளையார்கண்
முன்பணியு மன்பரொருபால்
துறைமுழுது நிறைதவள நித்திலப் பத்திவிடு
சோதியைச் சோதியாமற்
றுன்னுபுன லென்றுநனி பேதையர்க ளோடித்
துளைந்துவிளை யாடவெய்தக்

கறைவிரவு வேனயன நாரியர்க ணித்திலக்
கதிரென வுணர்த்தநா ணுங்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே கo

அற்றமறு முண்மையி னுரைத்தசொ லனைத்தினையு
மயலா ரிடத்துமுனமே
யறிந்தவர்க ளாகிச் செறிந்தனர்கொ லோவல்ல
தவனடிக் கடிமையாகிப்
பெற்றனர்கொ லோவலது சிலரிடைச் சிலர்பெற்ற
பெற்றியுடை யோராகியோ
பின்னறிவர் முன்னறிவர் பெற்றனர்கொ லோவென்று
பேசுசங்கையர்க ளொருபால்
நெற்றிவிழி யுஞ்சடைத் தலையினி லடங்கியிடு
நெடியசுதி பிறைமதியமு
நீலகந் தரமுங் கரந்துநா ருருவாய
நிமலனிவ னிவனையடையக்
கற்றவர்க ளாகிப் பிறந்தவெல் லோர்களுங்
கருத்தினின் முயற்சிபெறுவார்
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே கக

மறைவாழி மறைசொன்ன நெறிவாழி நெறிநின்ற
மன்னவர்கண் மன்னிவாழி
வாழியே யனையவரும் பாவமிகு பரசமய
வன்படை துரந்தசைவத்
துறைவாழி துறைதொறுந் தாளமெறி மறிதிரைக
டுன்னுபல மலர்வாவிசூழ்
தொன்மதுரை மாநகர் நன்மைபெற வாழிநற்
றொண்டர்க டழைத்துவாழு
முறைவாழி முறையிட்டு மாயன்முதல் விண்ணவர்
முகங்கருகி வேர்வாடவே

முன்னோடி யணைவார்கள் பின்னோடி யடலோடு
முடுகித் துரந்தகஞ்சக்
கறைவாழ் கருங்கண்ட னுமையோடு மினிதுவாழ்
கமலைநகர் வாழிவாழி
கமலா புரந்தங்கி வருஞான சம்பந்த
கருணாகரன் சமுகமே

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை
முற்றிற்று
குருபாதந்துணை
திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதந்துணை

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு

காப்பு

நற்குருகா ருங்கமலை ஞானசம் பந்தனெனுஞ்
சற்குருவைத் தாலாட்டத் தந்திமுகன் றந்தருள்வாய்

நூல்

கமலைவாழ் ஞானப்ர காசனரு ளால்யானும்
விமலமுறக் கூடலிலே மிக்குதயஞ் செய்தானே ௧
பொய்கண்ட சந்தானம் பொய்யாக வேவெண்ணெய்
மெய்கண்ட சந்தான மேதினியில் வந்தானே ௨
கங்கை யிளம்பிறையுங் கண்ணனலு மான்மழுவு
மங்கை யிடமு மறைத்துலகில்வந் தானே ௩
திருஞான சம்பந்த தேசிகனு மிங்கென்பாற்
கருஞான சம்பந்தக் கட்டறுக்க வந்தானே ௪
பாலாட்டும் பொன்முடிமேற் பாம்பாட்டல் போற்சிறியேன்
றாலாட்டுந் தன்செவியிற் சாத்துந் தயாபரனே ௫
நாத மிடியாக நல்லவிந்து மின்னாகப்
போத மழையாகப் பொழியின்ப பூரணனே ௬
வான்போ னிறைந்த வடிவிலதாய் நிர்க்குணமாய்த்
தேன்போற் பொழிந்தறிவிற் றித்திக்குந் தேசிகனே ௭
முப்பாழி னுள்ளே முளைத்தெழுந்த முச்சுடரா
யப்பாழ் விளைவி னகண்டமரு மாரியனே ௮
ஆன சிதானந்த வகண்டபரி பூரணத்தை
மோன மொழியாலே மொழிந்தருள வந்தானே ௯
வேதா கமத்தின் விளைவாய் விளைந்தவருட்
போதானந் தப்பொருளைப் போதிக்கும் போதகனே ௧௦
காட்டத்தி லங்கியெனக் கட்டுருவிற் காட்டியென
னாட்டத் திரிவியென நல்லுதயஞ் செய்தானே ௧௧

அத்துவா மேனியனே வல்லாத பேரொளியோ
நத்துவாழ் செங்காத்த னுடற் கரியானே ௧௨
சொற்பிரமா ணாதிகளாற் றோன்றாச் சுகவடிவைச்
சிற்பிரமா ணத்தில்வைக்குந் தேசிக சிந்தாமணியோ ௧௩
தேடிருவர் காணாத செந்தாமரை சிவப்ப
நாடிருளிற் றூது நடந்துவரு நாயகமோ ௧௪
உபயகரங் காட்டியழு தோலமிட்டு நிற்போருக்
கபயகரங் காட்டி யருளுமரு ளாகரனே ௧௫
பொய்கை வளநாடும் பொன்னி வளநாடும்
வைகை வளநாடும் வாழ மகிழ்ந்தானே ௧௬
ஆட விருந்திசையு மாரூரு மன்பருள்ளுங்
கூடல் வளம்பதியுங் கோயிலெனக் கொண்டானே ௧௭
மெய்யன்ப ரெல்லாம் வியன்கருணை பாராட்டப்
பொய்யன்பனேனைப் பொருட்படுத்தும் போதகனே ௧௮
விண்முகத்தி னாலே விளங்கு கதிர்மதிபோற்
சண்முகத்தி னாலே தயங்குந் தனிச்சுடரோ ௧௯
சைவமணம் வீசுபுகழ்ச் சம்பந்த ரன்பருள்ளே
தெய்வமணம் வீசுஞ் சிதானந்த சீதளமோ ௨௦
கல்லாமற் கற்றிடநான் காணாத காட்சிதனைச்
சொல்லாமற் சொல்லுமொரு தூயதிரு வாசகனே ௨௧
நேரா மடியரிடு நேசப் பயிர்விளைவிற்
பேராமற் பாயும் பெருங்கருணைப் பேராறே ௨௨
தீராமற் றீரத் திரிமலமு மோர்நொடியிற்
பாராமற் பார்க்குமருட் பார்வை படைத்தானே ௨௩
ஒன்றிரண்டு மூன்றுநா லுற்றவுபாயத்திறத்தாற்
றொன்றுதொட்டு வந்தவினைத் தொத்துந் துடைப்பானே ௨௪
ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தித்திக்குந் தேசிகனே ௨௫
தங்காதல் கொண்ட தமியே னுளங்குளிரச்
சிங்கா தனத்திற் சிறந்திருக்குந் தேசிகனே ௨௬
மாணாப் பவத்துயர மாற்றி மறித்துலகங்
காணாமே லென்றலையிற் கைத்தலத்தை வைத்தானே ௨௭

தெய்வத் திருநீறுஞ் செஞ்சந் தனக்காப்புஞ்
சைவமணித் தாழ்வடமுஞ் சாத்தும் புயாசலனே ௨௮
சேர்தர்க்க வாதமொடு தெக்கண சித்தாந்தமெல்லாம்
போதிக்க வந்தவருட் போதனா ரென்பாயோ ௨௯
சினவரவ நீத்தனையான் றென்கூடற் சம்பந்த
னனவாதஞ் சாற்றி விளை யாடவா வம்புலியே ௩0
சகளங்கம் போக்குமுனைத் தன்சோதி யாக்கிவிடு
மகளங்க தேசனாட னாடவா வம்புலியே ௩௧
செத்துப் பிறப்பவரைத் தெய்வமெனத் தேறாதென்
கொத்தடிமை கொண்ட குருபரனைச் சொன்னாரார் ௩௨
ஓரொளியைக் காட்டி யொளிக்குமொளி காட்டியங்கே
சீரொளியுங் காட்டவல்ல சித்தர்தமைச் சொன்னாரார் ௩௩
ஊடுகினுங் கூடுகினு மொக்கவெதி ராடுகினுங்
கூட விளையாடுங் கோமானைச் சொன்னவரார் ௩௪
அறுபத்தைந் தாம்விளையாட் டாக வருளாலென்
கெறுபத்தை யுங்கெடுத்த கேடிலியைச் சொன்னவரார் ௩௫
உள்ளந் தனையுருக்கி யொப்பிலா வானந்த
வெள்ளந் தனைப்பெருக்கும் வேந்தரே கண்வளரீர் ௩௬
ஊனவிழி யிங்கே யுறங்கவுறங் காதவொரு
ஞானவிழி தந்தகுரு நாதரே கண்வளரீர் ௩௭
நாயே னுனதடிக்கீழ் நாடோறுங் கண்வளரத்
தாயே யெனையாண்ட சற்குருவே கண்வளரீர் ௩௮
காரணத்தால் வந்த கருணைச் சம்பந்தனுடன்
பூரணியுங் கூடப் புழுகணைமேற் கண்வளரீர் ௩௯
எந்தைகுரு தாலாட் டிருபத்தோ டிருபதுவுஞ்
சந்ததமுங் கற்றுணர்வோர் சந்ததமும் வாழியரே ௪0

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் தாலாட்டு

முற்றிற்று

குருபாதந்துணை

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

குருபாதந்துணை

ஸ்ரீமத் ஞானசம்பந்ததேசிகர் திருப்பள்ளியெழுச்சி

காப்பு

ஞானசம் பந்தகுரு வைப்பளி யுணர்த்தலருள்
நாமறியு மாறுபுகல்வான்
ஆனைமுக னைக்குகனை யக்குருவை யொக்கவரு
ளாரனடி வழுத்திமகிழ்வாம்

நூல்

வேதாந்த வேதகா போதாந்த போதகா
மிக்கசித் தாந்தவிகிர்தா
நாதாந்த நாயகா ஞானசம் பந்தகுரு
நாதனே பள்ளியுணராய் க

பார்சகல துன்பமொழி யப்பளி புகும்பரம
காரணனே பள்ளியுணராய்
சீர்பரை யெனும்பரம காரணி யுடன்றருமை
தேசிகனே பள்ளியுணராய் உ

விண்ணரசு மண்ணரசு மிக்கதிசை யோரரசும்
வேதமுத லோதியுணர்வான்
நண்ணுபுக ழெண்ணரிய ஞானசம் பந்தகுரு
நாதனே பள்ளியுணராய் ந

ஆதியொரு நாலுவழி யானவர்செ யோகமுத
லானமனு நீதிபுரிவான்
சாதிகுல மேனிசம யம்புகல வந்தவொரு
சற்குருவே பள்ளியுணராய் ௪

அநாதியச ராசரமு மானவுயிர் யாவைகளு
மனுதியுண வுண்ணமுயல்வா
னனுதியரு ளானதென் னாலவாய் வாழவரு
மற்புதனே பள்ளியுணராய் ௫

பத்திசெயு மன்பரும் பாவனு தீதரும்
பாடுவோ ராடுவோரும்
புத்தியொடு முத்திபுகு வான்றருமை வாழவரு
போதகனே பள்ளியுணராய் ௬

*ஓராறு சமயமு மோராறு சமயமு
மோரா றெழுத்து முயல்வா
னோராறு சென்னியி லொளித்துவந் திடுந்தேசி
கோத்தமா பள்ளியுணராய் ௭

நற்கமலை யாதியெனு ஞானப்ர காசனருள்
ஞானசம் பந்தகுருவே
கற்றவுன தன்படியர் மிக்கவரு ணுடிகரு
ணகரா பள்ளியுணராய் ௮

ஆணவுயிர் மூவகையு ளானபரி பாகவித
மானவித் தீக்கைபுரிவா
ஞனவரு ளேவடிவ மானகுரு வேயகில
மானவா பள்ளியுணராய் ௯

* ஓராறு சமயமும் ஓராறு சமயமும்—அறுவிதச் சமயத் தோறும் ஆறுகாலங்களிலும்.

அண்டருந் தொண்டரு மானமுனி வோர்களு
மத்துவித முத்தியறிவான்
றண்டமிழ்சொற் றென்றருமை ஞானசம் பந்தனுஞ்
சற்குருவே பள்ளியுணராய் க0

வாழ்கமறை யந்தணர்கள் வானமரர் நீதியுற
வாழ்கவரு ளாகமமெலாம்
வாழ்கதிரு நீறுசிவ மந்திரமொ டுந்தருமை
வாழ்கவே பள்ளியுணராய் கக

ஸ்ரீமத் ஞானசம்பந்த தேசிகர் திருப்பள்ளியெழுச்சி
முற்றிற்று

குருபாதந்துணை

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரியர் திருவடிவாழ்க

சுபம்.

இப்புத்தகம் தேவையானவர்கள்
திருக்கயிலாயபரம்புரைத் தருமபுரவாதீன
மடாலயத்தில் இலவசமாகப்
பெற்றுக்கொள்ளலாம்.